ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Jewelry in Gift

# கொடையில் அணிகலன்

M. Selvapriya
*Research Scholar of Tamil, Department of Tamil, Periyar University, Salem, India*
**மா. செல்வபிரியா**
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், இந்தியா*

***Article Info:***

Received 12-12-2022 | Accepted 11-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 22-26

**ABSTRACT**

As much as the sangam people used clothes to cover the body, they also used ornaments. Kalan, which generally means thread, has been studied at various places in sangam literature. It is clear that the ornament of thread and kalan was given. Kalan is a generic name meaning an ornament. Sangam hymns say that the recipients received an ornament called Kalan, which means ornament. Kanni is a necklace that represents a flower garland. The nighters of the sangam period also received Kanni and garland. Although there is no evidence to suggest what kind of flower these garlands are, they may be golden garlands. Most of the recipients of the garlands were female artistes, viraliyas. One of the naturally occurring gemstone ornaments is the gold lotus. The patrons of the sangam period gave potamarai only to patini, a female ballet dancer.

***Keywords:***

*Thread, Kanni, Mala, Kalan, Pottamarai*

## முன்னுரை

சங்ககாலப் புரவலர்கள் தன்னை நாடிவரும் பரிசிலர்களின் வறுமையை உணர்ந்து முதலில் கொடுத்தது உடையாகும். ஆடை மட்டுமே மனிதனுக்கு அழகு சேர்த்ததா என்றால் இல்லை. அவற்றில் அணிகலனின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். சங்க இலக்கியத்தின் காணப்படும் இனக்குழுவினர், குறுநில மன்னர், வேந்தர் போன்ற சமூகத்தைச் சார்ந்த புரவலர்கள் கொடுத்தக் கொடையான அணிகலனைச் சமூகத்தின் அடிப்படையில் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அணிகலன் - விளக்கம்

அணி (Attire) என்ற சொல்லுக்கு அழகு, அலங்காரம், ஒப்பனை என்பது பொருள் அணிந்துக் கொள்வது அழகு தருவது அணி எனப்படும். புரவலர்கள் தன்னை நாடிவரும் பரிசிலருக்கு அணிகலன்களைக் கொடையாகக் கொடுத்துப் பாதுகாத்துள்ளனர். **“அணிகலன் என்பதற்கு ஆபரணம், நகை, பூண், அணி, தடையம், பணி, கலன், அலங்காரம், இழை என்று பல பொருள்கள் கூறப்படுகின்றன. அணியப்படுவதால் நகை எனப்படுகிறது. கல்லென்னும் ஒலி எழுப்புவதால் கலன் எனப் பெயர் உண்டாயிற்று. பூணப்படுவதால் பூண் எனப்பெயர் பெற்றது அணிந்து கொள்வது அல்லது அழகு தருவது அணி எனப்படும்”**[1] அணிகலன் என்பது ஆண் பெண் என இருபாலரும் பெறும் கொடைப் பொருள் என்பது தெளிவாகின்றது. **“பரிசுகள் வழங்கப்பட்டதற்கு அடையாளமாக ஈதல், சுரத்தல், உதவுதல், எறிதல், தருதல் (தரீஇ), சிதறுதல், வீசுதல், நல்குதல், கவிழ்தல் போன்ற தொழில்படுச் சொற்கள் இடம் பெற்று இருக்கின்றன. கொடுப்போரின் நேர்கூற்றாகவும் கொடுத்ததை எடுத்துக் கூறும் புலவர் (பெறுவோர்) கூற்றாகவும் இச்சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன”**[2] இதன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட கொடைப்பொருள் இது என்பதை அடையாளம் காண இயலுகின்றது.

## இழை

சங்க இலக்கியத்தில் இழை என்பது அணிகலன் என்றே பொருள்படும். **“இழை என்பது பொன்னில் கற்களை வைத்து இழைக்கப்படுவதால் பொன்னைக் கம்பிகளாக இழைத்துச் செய்யப்படும் அணிகலன்களுக்கும் பெயராயிற்று"**[3] (வெ. வரதராசன், தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், ப.43) எனவே இழை என்பது இழைத்துச் செய்யப்பட்ட அணிகலனுக்கானக் காரணப்பெயர் என்பது தெளிவாகின்றது.

## குறுநில மன்னர்

குறுநில மன்னர்களுள் ஒருவரான நன்னன் சேய் நன்னன் தன்னை நாடிவரும் விறலியருக்கு விளங்கிழை கொடுத்ததைப் பின்வரும் அடிகள் சுட்டுகின்றன.

> **“......... ............ .......... விறலியர்**
> **சீர்கெழு சிறப்பின் விளங்கிழை அணிய”** **(மலைபடு. 569-570)**

விறலியர் சிறப்பான இழை என்னும் வெளிப்படையாகப் பெயர் சுட்டப்படாத அணிகலனைப் பெற்றது தெளிவாகின்றது.

### வேந்தர்கள்

சேர மன்னனான பெருங்கடுங்கோ பாடினிக்கு இழை என்றழைக்கப்படும் அணிகலனைக் கொடுத்ததை

**"சீருடைய விழை பெற்றிசினே"** **(புறநா. 11:13)**

என்ற அடி இயம்புகின்றது. பாடினிப் பெற்ற அணிகலன் இழை என்பது குறிப்பிடப்படுவது தெளிவாகின்றது. குறுநில மன்னர்களும் பெருவேந்தருக்கு நிகராக கொடைக் கொடுத்துள்ளனர். இருவருமே பாணர் மரபின் பெண்பாலருக்கும் (பாடினி) கூத்தர் மரபின் பெண்பாலருக்கும் (விறலி) கொடுத்ததால் இழை என்பது பாடினி விறலியர் என்னும் பெண் பரிசிலருக்கு மட்டுமே கொடுக்கப்படும் அணி என்பது தெளிவாகின்றது.

### கலன்

கலன் (jewel) என்னும் சொல் அணிகலனைக் குறிக்கும். **"கல்லென்னும் ஒலியெழுப்புவதால் கலன் எனப் பெயர் உண்டாயிற்று"**[4] (வெ. வரதராசன், தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், ப.43)

### குறுநில மன்னர்

குறுநில மன்னனான அகுதை என்பவன் பொருநருக்கு நன்கலம் கொடுத்ததை

**"நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை"** **(அகநா. 76:4)**

என்ற அடி கூறுகின்றது. குறுநில மன்னனான அகுதை மட்டுமே நன்கலம் கொடுத்தது தெரிகின்றது. பெருஞ்சித்திரனாரால் பாடப்பட்ட குமண பெருவள்ளல் தன்னை நாடிவரும் பாடுநருக்குக் கொடையாக அரிதான பொன் அணிகலன்களைக் கொடுத்ததை

**"கேடின் றாக பாடுநர் கடும்பென**
**அரிதுபெறு பொலங்கல மெளிதினின் வீசி"** **(புறநா. 160:10-11)**

என்ற அடி இயம்புகின்றது. மேலும் பாரி வள்ளல் இரவலர்க்குக் கலன் கொடுத்ததை

**" .......... ........... ......... இரவலர் செலினே**
**........... ........... ......... நன்கலன் ஈயும்"** **(அகநா. 303:8-9)**

என்ற அடிகள் கூறுகின்றன. வள்ளல்களான குமணன், பாரி போன்றோர் பாடுநர், இரவலர் பொருட்டு நன்கலம் கொடுத்தது தெளிவாகின்றது. குறுநில மன்னன் பொருநருக்கும், வள்ளல் பொருநர், இரவலர்களுக்கும் கொடுத்ததன் வழி கலன் என்னும் பொதுப்பெயர்க் கொண்ட அணி கலைஞருக்குக் கொடுக்கப்பட்டது உறுதி செய்யப்படுகின்றது.

### வேந்தர்கள்

சேர மன்னர்களான செல்வக்கடுக்கோ வாழியாதன், பல்யாகச்சாலை செழுகெழுக்குட்டுவன், ஆடுகோட்பாட்டு சேரலாதன் போன்றோர் கலன் என்னும் அணியைக் கொடையாகக் கொடுத்ததைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

**"பரிசிலர்க் தருங்கல நல்கவுங்"** **(புறநா. 14:10)**

என பரிசிலருக்கும் என

**"குறையோர் கொள்கலம் போல"** **(அகநா. 142:6)**

குறையோருக்கும்

**"..... ....... ....... கைவல் பாண**
**தென்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை"** **(பதிற். 67:3-4)**

எனவே பாணன் பெற்ற அணிகலன் முத்தாலானது என்பது தெளிவாகின்றது. பல்யானை செழுகெழுக்குட்டுவன் வயிரியருக்கு அணிகலன் கொடுத்ததைக் கீழ்க்கண்ட

**"சிறுமகி ழானும் பெருக்கலம் வீசும்"** **(பதிற். 23:9)**

என்ற பாடல் அடி கூறுகின்றது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் இரவலர்களுக்கு அணிகலன் கொடுத்ததை

**"உரையா னன்கலம் வரைவில் வீசி"** **(பதிற். 54:8)**

எனவும் இளஞ்சேரல் இரும்பொறை பாடினிக்கு கலம் கொடுத்ததை

**"சென்மோ பாடினி நன்கலம் பெருகுவதை"** **(பதிற். 87:1)**

என்ற பாடல் அடிகள் இயம்புகின்றன. எனவே பரிசிலர், குறையோர், பாணர், வயிரியர், இரவலர், பாடினி போன்றோருக்குக் கலம் எனப்படும் அணிகலனைச் சேர மன்னர்கள் கொடுத்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. சேர மன்னரைக் குறிக்கும் வானவர் என்ற பெயர் அகநானூற்றில் காணப்படுகின்றது. எனவே வானவர் எனப்படும் சேரர்கள் தன்னை நாடிவரும் வருநர்க்கு நன்கலம்

**"நசையில் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும்"** **(அகநா. 143:11)**

கொடுத்ததை என்ற அடி கூறுகின்றது. சோழ மன்னனான சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் எருக்காட்டுர்த் தாயாங் கண்ணனார் என்னும் புலவனுக்கு கலன் நல்கியதை

**"அருங்கல நல்கி யோனே"** **(அகநா. 397:18)**

என்ற அடி கூறுகின்றது. மேலும் திதியன் என்னும் சோழ மன்னனும் பாணருக்குக் கலன் கொடுத்ததை கீழ்க்கண்ட

**"பாணர் ஆர்ப்ப பலகலம் உதவி**
**......... .......... .......... திதியன்"** **(அகநா. 331:10)**

என்ற அடிகள் கூறுகின்றன. சோழ மன்னர்கள் புலவர்கள், பாணர்கள் போன்றோருக்குக் கலன் என்னும் அணிகலன் கொடுத்ததை உணரமுடிகின்றது. சோழன் மன்னர்களால் புலவருக்கும், பாணருக்கும் கலம் கொடுக்கப்பட்டுள்ளது. பாண்டிய மன்னர்கள் கலன் கொடுத்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லை எனலாம்.

## மாலை

மாலை என்பது புரவலர்கள் கொடுத்த அணிகள் வகைகளுள் ஒன்று. மாலையைப் பரிசிலர்கள் கொடையாகப் பெற்று மகிழ்ந்துள்ளனர். **"மாலை என்ற சொல்லாலும் ஆரம் என்ற சொல்லாலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுப் பொருளாக வரும்போது முத்துமாலை முத்துப் பொன் இவற்றால் அமைந்த மாலைகளே காணப்படுகின்றன"[5]** (நா. அனிதா, சங்க இலக்கியங்களில் பரிசில், ப.143) புலவர்கள் பெற்ற அணி வகைகளில் ஒன்று ஆரம் ஆகும்.

சிறிய ஊரினை தனது ஆட்சி எல்லையாக உடைய சீறூர் மன்னன் பாடினிக்கு மாலைக் கொடுப்பான் என, ஆலங்குடி வங்கனார் கூறுவதன் வழி,

**"பாடினி மாலை யணிய"** **(புற. 319:14)**

பாடினி மாலைப் பெற்றது தெரியவருகின்றது. எனவே இம்மாலை மலர் மாலையா பொன்மாலையா என ஐயம் ஏற்படும் நிலை உள்ளது. எனவே வேந்தர்களின் பொருட்டு வேந்துவிடு தொழிலுக்குச் சென்ற சீறூர் மன்னர் வெற்றி பெற்று அதன் பொருளைப் பாடினிக்குக் கொடுத்தான் என்பதால் சீறூர் மன்னர் கொடுத்த மாலை பொன்மாலை என்பது திண்ணம்.

## குறுநில மன்னர்கள்

தொண்டைமான் இளந்திரையன் தன்னை நாடிவரும் விறலியருக்குப் பொன்னாலான மாலையைக்

**"........... ........... ....... பொலியப் பொன்னிற**
**தொடையமை மாலை விறலியர் மலைய"** **(பெரும்பாண். 485-486)**

கொடுத்ததை என்ற அடிகள் கூறுகின்றன. குறுநில மன்னனான தொண்டைமான் இளந்திரையன் விறலிக்குப் பொன்னாலான மாலையைக் கொடுத்ததுத் தெளிவாகின்றது.

கண்ணி என்னும் அணிகலனை ஓரி என்னும் வள்ளல் தன்னை நாடி வரும் இரவலருக்குக் கொடுத்ததைப் பின்வரும் என்ற பாடல் அடி கூறுகின்றது.

**"வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்"** **(புறநா.153:8)**

வள்ளலான ஓரி கொடுத்த கண்ணியும் கலனும் கழுத்தணியான மாலையையும் அணிகலனையும் குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது. வள்ளல் தன்மையைக் கொண்ட பேகன் தன்னை நாடிவரும் விறலிக்கு மாலை கொடுத்ததை,

**"மாணிழை விறலி மாலையொடு விளங்கக்"** **(புறநா.141:2)**

என்றுரைக்கின்றது. மாலை என்பது வள்ளல்களின் தன்மைக்கு ஏற்ப பொன்னாக இருக்கும் என்பது தெளிவாகின்றது.

## வேந்தர்கள்

முத்தாலான மாலையை (ஆரம்) என்னும் அணிகலன் வகையை சேர மன்னனான கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் தன்னை நாடிவரும் விறலிக்கு கொடுத்ததைப் பரணர் கீழ்கண்ட அடியில் கூறுகின்றார்.

**"ஒண்ணுதல் விறலியர்க் தாரம் பூட்டிக்"** **(பதிற். 48:2)**

முத்தாலாகிய ஆரத்தைக் கொடையாகக் கொடுத்தவர் சேர மன்னர் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்பது தெளிவாகின்றது. மேலும் முத்து பாண்டிய நாட்டில் சிறப்பாக கருதப்படுவதால் சேர நாட்டிலும் பண்டமாற்று முறையால் புழக்கத்தில் இருந்த நிலையில் அப்பொருள் கொடையாகாக் கொடுக்கப்பட்டுள்ளது. சோழ மன்னனான கரிகால பெருவளத்தான் தன்னை நாடிவரும் பாடினிக்கு,

**"நூலின் வலவா நுணங்கரின் மாலை**
**........... ......... ........ பாடினி அணிய"** **(பொருநர். 161-162)**

மாலையைக் கொடுத்து ஆதரித்ததைக் காண முடிகின்றது. நூலினால் கட்டிடாத நுணுக்கமான மாலையைப் பாடினி சேர மன்னர்களிடம் பெற்றது தெரிகின்றது. நூலினால் கட்டப்படாத மாலை என்ற நிலையில் மாலையின் மூலப்பொருள் தெரியவில்லை.

மாலை என்னும் அணியை சீறூர் மன்னன், வள்ளல், குறுநில மன்னன், சோழ மன்னன், என அனைத்து சமூகத்தைச் சார்ந்தவர்களும் கொடுத்துள்ளனர். இவர்கள் அனைவரும் கொடுத்த மாலை பொன்னாலான மாலை என்பது தெரிகின்றது.

## பொற்றாமரை

பொன்னால் செய்யப்பட்ட தாமரைப் போன்ற அமைப்பினை உடைய அணி பொற்றாமரையாகும். **"பரிசில் அளிக்கும் போது இன்னார்க்கு இன்ன பரிசு அளித்தல் வேண்டும் என்னும் வரன்முறையும் இருந்தது. பாடினிக்கு ஆபரணங்கள் இழை ஈதலும் பாணர்க்குப் பொற்றாமரை அளித்தலும் மரபு"[6]** ந. சுப்ரமண்யன் கூறுகின்றார். பொற்றாமரை பெற்றவர் இவர் என்பதை ஞா. தேவநேயப்பாவாணர் **"அரசருக்கு பாணனுக்குப் பொற்றாமரையும் அவன் மனைவியாகிய பாடினிக்கு அல்லது விறலிக்குப் பொன்னணி கலமும் பரிசிலாக அளித்து வந்தார்"[7]** என்கிறார். (தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.63)

### சீறூர் மன்னர்கள்

சீறூர் மன்னர்கள் பாணர்களுக்குத் தாமரைக் கொடுத்து ஆதரித்துள்ளனர் என்பதை ஆலங்குடி வங்கனாரின்

**“வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே” (புறநா. 319:15)**

என்ற அடி சுட்டுகின்றது. வாடாத தாமரை என்பதால், “தாமரை” என்பது மலரல்ல, “பொன்னாலான மலர் போன்ற அமைப்புடைய ஆபரணம்” என்பது தெரிகின்றது.

### குறுநில மன்னர்

நன்னன் சேய் நன்னன் தன்னை நாடிவரும் கூத்தருக்குத் தாமரை கொடுத்ததை மலைபடுகடாம்

**“தலைவன் தாமரை மலைய” (மலைபடு. 569)**

என்று இயம்புகின்றது. கூத்தர்களும் பொற்றாமரையைப் பரிசாக பெற்றது தெளிவாகின்றது.

வள்ளல்களான காரி, பேகன் போன்றோர் பாணருக்கு பொற்றாமரையைப் பரிசாகக் கொடுத்துள்ளனர். காரியிடம் தாமரையைப் பரிசாகப் பெற்றதை மாறோக்கத்து நப்பசலையார் பின்வருமாறு கூறுகிறார்.

**“பாணர் சென்னி பொலியத் தைஇ**
**வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்” (புறநா. 126:2-3)**

பாணருடைய தலையில் பொலிவுப் பெற்ற தாமரை சூட்டப்பட்டது என்பதால் தாமரை கூத்தர், பாணர், பெருநர் போன்ற ஆண் பரிசிலர் பெறும் தலையணி என்பது தெளிவாகின்றது. மேலும் பேகன் பாணருக்குத் தாமரை கொடுத்ததை

**“பாணன் சூடிய பசும்பொற் றாமரை” (புறநா. 141:1)**

என்ற அடி கூறுகின்றது. பசும்பொன் என்பது மாற்று உயர்ந்தப் பொன் எனப்பொருள்படும். கலப்படம் அற்ற பொன்னால் செய்த தாமரை, பேகனால் கொடுக்கப்பட்டுள்ளது.

### வேந்தர்கள்

சேர மன்னர்கள் தன்னை நாடிவரும் பரிசிலருக்கு கொடுத்த கொடையுள் ஒன்று தாமரை. அதனை சேரமான் பெருங்கடுக்கோ, களங்காய் கண்ணி நார்முடிச்சேரல், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் போன்றோர் கொடுத்துள்ளனர். பாணர் பொன்னால் செய்யப்பட்ட தாமரையைப் பெற்றதை,

**“.......... .......... .......... பாண் மகனும்மே**
**எனவாங்கு**
**ஒள்ளழல் புரிந்த தாமரை**
**வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே” (புறநா.11:15-18)**

என்ற பாடல் அடிகள் கூறுகின்றன. மேலும் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் மற்றும் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் பாணருக்குப் பொற்றாமரை கொடுத்ததை

**“பாணர் பைம்பூ மலைய” (பதிற். 40:24)**

**“பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி” (பதிற். 48:1)**

போன்ற பாடல்கள் கூறுகின்றன. ஒள்ளழல், பைம்பூ, போன்றவை பொன்னைக் குறிக்கும் சொல். எனவே பாணர்கள் பொன்னாலான தாமரையைப் பெற்றனர் என்பது தெளிவாகின்றது. சோழ மன்னனான கரிகால் பெருவளத்தான் தன்னை நாடிவரும் கூத்தருக்குப் பொற்றாமரை கொடுத்ததைக் கீழ்க்கண்ட

**“எரியகைந் தன்ன வேடில் தாமரை**
**சுரியிரும் பித்தை பொலியச்சூட்டி” (பொருநர். 159-160)**

என்ற அடிகள் கூறுகின்றன. பித்தை என்பது ஆணின் கொண்டை என்பதால் தாமரையைப் பெற்றவன் பொருநன் என்பது தெளிவாகின்றது. பாண்டிய மன்னனான பல்யாகச் சாலை முதுகுடுமி பெருவழுதி, தன்னை நாடிவரும் பாணருக்குத் தாமரை கொடுத்ததை

**“பாணர் தாமரை மலையவும்” (புறநா. 12:1)**

என்ற அடியால் அறியலாம். பாணர் பெற்றது தாமரை என்பது தெளிவாகின்றது. அனைத்து சமூகத்தினரும் பாணர், கூத்தர் போன்ற கலைஞர்களை ஆதரித்து பொன்னாளாகிய பூவை கொடையாகக் கொடுத்துள்ளனர். பாணர், கூத்தர் என்னும் ஆண்பால் கலைஞர்கள் பெற்றது பொற்றாமரை என்பது தெளிவாகின்றது.

### மணி மற்றும் முத்து

மணி மற்றும் முத்து வகைகளையும் சங்ககால பரிசிலர் கொடையாகப் பெற்றுள்ளனர் என்பதை நா. அனிதா பின்வருமாறு கூறுகின்றார். **“ஒளி பொருந்திய மணிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட அணிகலன்களும் கலகலவென ஒலியை எழுப்பும் மணிகள் இணைக்கப்பட்ட அணிகலன்களும் பழங்கால மக்கள் பயன்படுத்தி வந்ததை தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன”**[8] (ந. அனிதா, சங்க இலக்கியங்களில் பரிசில், ப. 142)

## வேந்தர்கள்

சோழன் இராசசுயம் வேட்ட பெருநற்கிள்ளி தன்னை நாடிவரும் கிணைஞனுக்கு மணிகளைக் கொடுத்ததைக் கீழ்க்கண்ட

**"நீ புரவல யெமக்கென்ன**
**மலைபயந்த மணியுங் கடறுபயந்த பொன்னும்**
**கடல் பயந்த கதிர்முத்தும்"** **(புறநா. 377:15-17)**

என்ற பாடல் அடிகள் கூறுகின்றன. மலையிலிருந்து பெறப்பட்ட மணிவகையும் கடலில் இருந்து பெறப்பட்ட முத்து வகையும் கொடுக்கப்பட்டு கிணைஞன் ஆதரிக்கப்பட்டது தெளிவாகின்றது.

## முடிவுரை

அணிகலன் கொடையும் பொருளாதாரத்தோடுத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. திணைநிலை மாந்தர்கள் நிலையேயாகும் அணிகலன் வகையும் கலைஞர் பெற்றது (இழை, கண்ணி, மாலை, பொற்றமரை, முத்து மற்றும் மணி) புலவர் மற்றும் கலைஞர் பெற்றது (கலன்) என்ற இருவேறு நிலைகளில் காணப்பட்டாலும் கலைஞர் பெற்ற அணிகள் ஆண் பெண் என்ற வேறுபாட்டோடு கொடுக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.

## மேற்கோள்கள்

1. ப. மகேஸ்வரி, புறநானூறும் வரலாறும், ப.97
2. அனிதா.நா, சங்க இலக்கியங்களில் பரிசில், ப.139
3. வெ. வரதராசன், தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், ப.43
4. வெ. வரதராசன் , தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், ப.43
5. நா. அனிதா, சங்க இலக்கியங்களில் பரிசில், ப.143
6. ந. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், ப.33
7. தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.63
8. ந. அனிதா, சங்க இலக்கியங்களில் பரிசில், ப.142

## துணை நூற்பட்டியல்


1. நா, அனிதா. *சங்க இலக்கியங்களில் பரிசில்.* தமிழ் உயராய்வு மையம், தஞ்சாவூர், தமிழ்வேல் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, மார்ச் 2016.
2. ந, சுப்பிரமணியன். *சங்ககாலச் சமுதாயம். சென்னை,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், 2011.
3. தேவநேயப்பாவாணர். *பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்.* சென்னை, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், 2014.
4. ப, மகேஸ்வரி. *புறநானூறும் வரலாறும்.* சென்னை, சேகர் பதிப்பகம், 2019.
5. வெ, வரதராசன். *தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்.* தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1986.


## References


1. Na, Anitha. *Sanga Ilakkiyankalliil Pariciil*. Thanjavur, Tamil Uyaraayyu Maiyam, Thanjavur, Tamilveil umamakesvaranar Karanthaik kalaikkailuri, March 2016.
2. Na, Suppiramaniyan. *Sangakaala Samuthayam*. Chennai, New Century Book House Pvt Limited, 2011.
3. Thevaneeyapaavanar. *Pantaith Tamizhar Nakarikamum Panpatum*. Chennai, Ulaka tamilraychci Niruvanam, 2014.
4. Pa, Makesvari. *Purananoorum Varalarum*. Chennai, Sekar Publications, 2019.
5. Ve, Varatharasan. *Tamizharin Oppanaik kalaiththiran*. Thanjavur, Tamil University, 1986.


**How to cite this article:** M, Selvapriya. "Jewelry in Gift". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 22-26, https://aijtls.com/index.php/aijtls/article/view/7.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.